1978 செப்டம்பர் 9]

திரு. சி. கோவிந்தராசன் : மேட்டூர் பிரதேசத்தில் இருக்கக்கூடிய கெம்ப்ளாஸ்ட், மேட்டூர் கெமிகல்ஸ் கழிவு நீரால் ஏற்படுகின்ற பாதகத்தைப் போக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதிலே குடிதண்ணீர்ப் பிரச்சினை மட்டுமல்ல, வேளாண்மையும் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுப்பது என்ற முறையில் இயக்குநர் ஆலோசனையோடு கழிவு நீரை விஞ்ஞான முறையில் சுத்தப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். ஆலைகள் என்று இருந்தால் கழிவு நீர் வரத்தான் செய்யும்.

[முற்பகல் 10-30]

அதற்காக ஆலைகளே கூடாது என்று சொல்லிவிட முடியாது. கழிவுநீரைச் சுத்தப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்தால் அதன் மூலம் விவசாயத்திற்கும் உதவிகரமாக இருக்கும் என்ற முறையிலே தான் நெல்லிக்குப்பத்திலே பாரி சர்க்கரை ஆலையிலே எஃப்ளுவன்டை கிளியர் செய்வதற்கான திட்டத்தை அவர்களே கையாண்டிருக்கிறார்கள். அந்த முறையிலே அந்த முதலாளிகளிடத்திலே வற்புறுத்தி அந்தத் திட்டத்தை கையாண்டு எஃப்ளுவன்டை கிளியர் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்த ஆலோசனையை ஏற்று அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

(5) அறிக்கை அளித்தல் (தொடர்ச்சி).

(ஆ) பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை.

திரு. இரா. முத்தையா : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1971-1972-ஆம் ஆண்டிற்கான வணிகத் துறை தவிர்த்த பிற துறைகள் பற்றிய அறிக்கை, 1972-73-ஆம் ஆண்டிற்கான, வணிகத் துறை தவிர்த்த பிற துறைகள் பற்றிய அறிக்கை, 1972-73-ஆம் ஆண்டிற்கான வணிகத்துறைகள் பற்றிய அறிக்கை, ஆகியவற்றின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை தான் அவைமுன் அளிக்கிறேன்.